செய்தி வெளியீடு எண்: 394/2019 நாள்: 16.12.2019

# காஞ்சிபுரம் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு சார்பில் மனித சங்கிலி விழிப்புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்!

காஞ்சிபுரம் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு சார்பில் உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மனித சங்கிலி விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.12.2019) துவக்கி வைத்தார்.

பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மற்றும் கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் 500-ற்கும் மேற்பட்டோர் உறுதிமொழி மற்றும் மனித சங்கிலி பேரணியில் பங்கேற்றனர். பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து பூஜ்ஜியத்தை நோக்கி எடுத்து செல்லவும், புதிய எச்.ஐ.வி தொற்று நிலை இல்லாத நிலையை உருவாக்கவும், புறந்தள்ளுதல் மற்றும் ஒதுக்குதல் இல்லாத நிலையை உருவாக்கவும், எச்.ஐ.வியால் இறப்பில்லாத நிலையை உருவாக்க ஒருங்கிணைந்து பாடுபடுவோம் எனவும் சமூக பங்களிப்பின் மூலம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு பணியில் மாற்றத்தினை ஏற்படுத்துதல் என்கிற கருப்பொருளில் பொதுமக்களிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்ச்சியினை தொடர்ந்து 200-க்கும் மேற்பட்டடோர் சமபந்தி போஜனத்தில் கலந்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்.சுந்தரமூர்த்தி, சார் ஆட்சியர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.ஸ்ரீதர், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் காஞ்சிபுரம் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.V.K.பழனி, துணை இயக்குநர் (காசநோய் பிரிவு) மரு.செந்தில்குமார், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.**